

கழகப் பொருளாளரும், ஒன்றிய முன்னாள் அமைச்சருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் துணைவியாரும் தொழில்நுட்ப அணிச் செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜாவின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் மு.க.அழகிரி, அவரது துணைவியார் திருமதி காந்தி அழகிரி நேரில் வந்து அம்மையாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஆறுதல் கூறினர்.



கழகப் பொருளாளரும், ஒன்றிய முன்னாள் அமைச்சருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் துணைவியாரும் தொழில்நுட்ப அணிச் செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜாவின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்தில் நிதி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் வந்து அம்மையாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஆறுதல் கூறினார்.

# முன்னாள் அமைச்சர் அ.இரகுமான்கான் நூல்கள் வெளியீட்டு விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

1977, 1980, 1984 ஆகிய தேர்தல்களில் சேப்பாக்கத்தில் இருந்தும், 1989ல் பூங்கா நகரில் இருந்தும், 1996ல் இராமநாதபுரத்தில் இருந்தும் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பணியையும் நிறைவேற்றினார்.

**இன்றும் நம் நெஞ்சங்களில் வாழும் கழகக் காவலர்!**

தலைவர் கலைஞர் அமைச்சரவையில், தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருந்து பணியாற்றினார். இரண்டு முறை சிறுசேமிப்புத் துறை துணைத்தலைவராக இருந்தார். கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராகப் பணியாற்றியிருக்கிறார். தலைமைக் கழகச் செய்தித் தொடர்புச் செயலாளராக, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினராக பல்வேறு உயரங்களைப் பார்த்தவர் அண்ணன் ரகுமான்கான் அவர்கள். இப்படி, தன்னுடைய இறுதிமூச்சு வரைக்கும் கழகக் காவலராக இருந்தவர். இன்றைக்கும் நம் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்!

அவர் மறைவதற்கு சில நாட்களுக்கு முன்னால், கழக உயர்நிலைச் செயல்திட்டக் குழுக் கூட்டத்தை ஆன்லைனில் நாம் நடத்தினோம். அந்தக் கூட்டம் முடிந்ததும், என்னிடம் வீடியோ காலில் பேசிய அவர், என்னுடைய உடல்நலத்தைப் பற்றி அக்கறையோடு கேட்டு அதை கவனித்துக் கொள்ளச் சொன்னார். பதிலுக்கு நானும் அவருடைய உடல்நலனைப் பற்றி விசாரித்தேன். சிறுபான்மைச் சமுதாயத்துக்கு மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் நாட்டுக்கும் அவர் தேவை என்று சொன்னேன். அவர் கண் கலங்கிவிட்டார். ஆனால், சில நாட்களிலேயே நம் எல்லோரையும் கண்கலங்க வைத்துவிட்டு, அவர் மறைந்துவிட்டார்.

**எந்த சஞ்சலத்துக்கும் ஆட்படாமல் கொள்கை உறுதியோடு இருந்தவர்!**

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள் எத்தனையோ முறை அண்ணன் ரகுமான்கான் அவர்களைத் தன்னுடைய கட்சிக்கு வரச்சொல்லி அழைத்தார். ஆனால், சிறிய சஞ்சலம் கூட இல்லாமல், கொள்கை உறுதியுடன் கழகத்தில் இருந்தவர் அண்ணன் ரகுமான்கான் அவர்கள்.

ஒருமுறை அல்ல, இரண்டு முறை அவர் வீட்டில் வெடிகுண்டு வீசப்பட்டது. அதற்கெல்லாம் பயப்படவில்லை. மற்றொருமுறை, சிலர் அவர் வீட்டுக்கு கத்தியும், அரிவாளும் எடுத்துக்கொண்டு வந்து மிரட்டினார்கள். தன் மேல் கத்தி வீசியவரின் கையைப் பிடித்து மடக்கினார் அண்ணன் ரகுமான்கான் அவர்கள். உடனே தலைவர் கலைஞர் அவர் வீட்டுக்கே வந்துவிட்டார். இதுதான் தி.மு.க.! இதுதான் தலைவர் கலைஞர்!

**வரலாற்றில் இடி - மின்னல் - மழை என வருணிக்கப்பட்டவர்கள்!**

சட்டமன்றத்தில், அண்ணன் ரகுமான்கான் அவர்கள் எப்படியெல்லாம் செயல்பட்டார் என்று இன்றைக்கு இருக்கக்கூடியவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது நாம் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தோம். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சர். அப்போது சட்டமன்றத்துக்குள்ளே நின்று கழகத்தைக் காப்பாற்றிய எம்.எல்.ஏ.க்களில் முக்கியமான மூன்று பேர் சொல்ல வேண்டும் என்றால், அண்ணன் துரைமுருகன் அவர்கள் அண்ணன் க.சுப்பு அவர்கள், அண்ணன் ரகுமான்கான் அவர்கள், வரலாறு இவர்கள் மூன்று பேரையும் இடி மின்னல் - மழை என்று பதிவு செய்திருக்கிறது! அவர்கள் மூன்று பேரும் கேள்வி எழுப்பினால், சட்டமன்றமே அதிரும்!

சட்டமன்றத்தில், அவர்களால் பேச முடியாததை மக்கள் மன்றத்தில் பேசச் சொல்லி அனுப்பி வைத்த போது, தமிழ்நாடு முழுக்க கட்டுக்கடங்காத கூட்டம் கூடியது! இன்னும் சொல்ல வேண்டும் என்றால், சில ஊர்களில் இவர்கள் கூட்டங்களில் பேசச் சென்றபோது, அரங்கத்தில் ஏற்பாடு செய்திருந்தார்கள். அப்போது மக்கள் காசு கொடுத்து டிக்கெட் வாங்கி இவர்கள் பேசுவதைக் கேட்டார்கள்!

நினைத்துப் பார்க்கிறேன்... மாநாடுகளில் அண்ணன் ரகுமான்கான் பேச எழுந்தாலே, கூட்டம் ஆர்ப்பரிக்கும்; கைதட்டல் விண்ணை முட்டும்! அவருடைய நடை உடை பாவனை வித்தியாசமாக இருக்கும். அந்த சுருள் முடியை பார்த்தீர்கள் என்றால், எடுத்து சுருட்டிவிடுவார். ஐந்து நிமிடத்தில் தலைமுடியை சீவி விடுவார். ஆனால், சுருள் முடியை சுருட்டுவதற்கு 10 நிமிடம் ஆகும். பலமுறை நான் பார்த்திருக்கிறேன்.

அதைப் பற்றி தலைவர் கலைஞர் ஒருமுறை சொன்னார், “சட்டமன்றத்தில் உன் உடலாட தலையாட தலையிலுள்ள சுருள் முடியாட அக்காட்சி கண்டு ஆளும் அரசே ஆடியது” என்று தலைவர் கலைஞர் அவர்கள் பாராட்டினார். அந்த அளவுக்கு அவருடைய பேச்சு போலவே, அவருடைய ஹேர்ஸ்டைலும் ஃபேமஸ்!

**சட்டமன்ற விவாதங்களில் மையப் பொருளாக இருந்தவர்!**

அ.தி.மு.க. ஒரு விஷயத்தில் இரட்டை நிலைப்பாட்டை எடுத்தது. (எப்போதுமே அ.தி.மு.க. இரட்டை நிலைப்பாடு என்பது சாதாரணம் தான்!) இதைப் பற்றி சட்டமன்றத்தில் பேசிய அண்ணன் ரகுமான்கான் அவர்கள் என்ன சொன்னார் என்றால், “சின்னமோ இரட்டை இலை, அதனால் இரட்டைப் போக்கு” என்று ‘படார்’ என்று சொன்னார். இதற்கு யாராலும் பதில் சொல்ல முடியவில்லை! பல விவாதங்களுடைய மையப் பொருளாக இருந்தவர் அண்ணன் ரகுமான்கான் அவர்கள்.

**நாட்டை ஜனநாயகப் பாதையில் இருந்து திசை திருப்பும் முயற்சி!**

நேற்று நாடாளுமன்றத்தில், நாட்டை சர்வாதிகாரத்தை நோக்கி நகர்த்த புலனாய்வு அமைப்புகளை வைத்து தங்களுக்கு எதிரானவர்களை பதவி நீக்கம் செய்ய, ஒரு கருப்புச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார் ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள். இதற்கு முன்பு, குடியுரிமை திருத்தச் சட்டம், வக்ஃபு திருத்தச் சட்டம் என சிறுபான்மையின மக்களுக்கு எதிராக பல்வேறு சட்டங்களை எல்லாம் கொண்டு வந்தார்கள். அப்போதெல்லாம் இந்தச் சட்டங்களை திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி கடுமையாக எதிர்த்ததோ, அதேபோல இந்தக் கருப்புச் சட்டத்தை எதிர்ப்போம். இதையெல்லாம் அவர்கள் ஏன் செய்கிறார்கள். மக்கள் பிரச்சினையை திசை திருப்புவதற்காகச் செய்கிறார்கள். மக்களுடைய கவனத்தை திருப்புவது மட்டுமல்ல, நாட்டையே ஜனநாயகப் பாதையில் இருந்து திசை திருப்பு வதற்காக அதை செய்கிறார்கள்.

வரவேற்புரையாற்றிய தம்பி உதயநிதி அவர்கள் சொன்னதுபோல, இடியாகப் பேசிய அவர், தென்றலாக கவிதைகளையும் எழுதியிருக்கிறார். இதையெல்லாம் அறிந்துகொள்ள இந்த ஆறு புத்தகங்களையும் நீங்கள் எல்லோரும் வாங்கிப் படிக்கவேண்டும்! குறிப்பாக, அவருடைய சட்டமன்ற உரைகளை எல்லோரும் படிக்கவேண்டும். எப்படிப் பேசவேண்டும், எப்படி உரைகளைத் தயாரிக்க வேண்டும் என்பதற்கு, அவருடைய உரைகள் ஒரு பாடப்புத்தகமாக வந்திருக்கிறது! இரகுமான்கான் போன்ற இடிமுழக்கங்களாக பலர் உருவாக வேண்டும். அதற்காகத்தான், “என் உயிரினும் மேலான” “பாசறைப் பக்கம்” போன்ற பல முன்னெடுப்புகளை இளைஞர் அணியினர் செய்து கொண்டு இருக்கிறார்கள். மற்ற அணியினரும், இன்னும் பல முன்னெடுப்புகளை எடுத்து, கழகக் கொள்கை வீரர்களை உருவாக்க வேண்டும்.

**திராவிட இயக்க தீரர்களின் சிந்தனை!**

என்னைப் பொறுத்தவரைக்கும், “கொள்கையை விதைத்து, உழைப்பை உரமாக்கி, வெற்றியை விளைவிக்க வேண்டும்!” இயக்கத்தில் எத்தனைக் கோடி பேரைச் சேர்த்தாலும், அவர்கள் கொள்கைப் பிடிப்பு உள்ளவர்களாக வளர்த்தெடுக்க வேண்டும். அதற்கு, தந்தை பெரியார் - புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் - இனமானப் பேராசிரியர் போன்றவர்களுடைய எழுத்துக்களையும், பேச்சுக்களையும் கொண்டு செல்வது போல, அண்ணன் ரகுமான்கான் அவர்களுடைய, திராவிட இயக்கத் தீரர்களுடைய சிந்தனைகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்கவேண்டும்!

**வெல்க சுபேர்கானின் பணி!**

வெற்றியை நோக்கி நடைபோடும் படைக்குத் தேவையான படைக்கலனாக இந்த நூல்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார் தம்பி சுபேர்கான் அவர்கள். அவருடைய மறைவிற்குப் பிறகுதான் சுபேர்கான் அவர்களுடன் நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஆனால், பார்த்தவுடனே நிச்சயமாக இவர் ரகுமான்கான் அவர்களைப் பின்பற்றுவார் - அவர் வழியில் நடைபோடுவார் எனும்உறுதி எனக்கு ஏற்பட்டது. அவருக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய பொறுப்பை இன்றைக்கு சிறப்பான முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். எனவே, அவரை மீண்டும் வாழ்த்தி உறுதியுடன் சொல்கிறேன். சிறுபான்மை மக்களுக்கு எப்போதும் போல தி.மு.க. துணை நிற்கும்; துணை நிற்கும் என்று அந்த நிலையை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, தி.மு.க. இருப்பது உங்களுக்காகத் தான் - இந்தச் சமுதாயத்திற்காகத் தான் - குறிப்பாக சிறுபான்மைச் சமுதாய மக்களுக்கு கழகம் என்றைக்கும் துணை நிற்கும் - துணை நிற்கும் என்று கூறி, வாழ்க ரகுமான்கான் அவர்களின் புகழ்! வெல்க சுபேர்கான் அவர்களின் பணி! என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# பிறப்பால் தமிழராக இருக்கலாம்; ஆனால் உணர்வால் நிச்சயம் இல்லை!

இந்தியக் குடியரசு துணைத் தலைவருக்கான தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளராக தமிழ்நாட்டைச் சேர்ந்த சி. பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் அறிவிக்கப்பட்டு இருக்கிறார்.

பாஜக ஆட்சியில் இருந்த 1998 2004 ல் ஆறாண்டுகள் கோவை நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராக இருந்தவர் சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள். இந்த காலகட்டத்தில் தமிழ்நாட்டிற்கு அவர் என்ன செய்தார் என்றால், ஒன்றும் செய்யவில்லை என்பது தான் உண்மை. கச்சத்தீவு, முல்லைப் பெரியாறு, காவிரி நதிநீர் பங்கீடு, கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வருவது, அதிக நிதிப் பகிர்வு கோருதல் என தமிழ்நாட்டின் முக்கியமான பிரச்சினைகளுக்கு அவர் மக்களவையில் குரல் கொடுத்ததில்லை என்பதுதான் யதார்த்தம். இப்படி தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக குரல் கொடுக்காத சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிப்பது தமிழ்நாட்டிற்கு எதிரான செயல்.



**டாக்டர் வா.மைத்ரேயன்,**
**நாடாளுமன்ற மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர்.**

இன்றைய காலகட்டத்தில் தமிழ்நாட்டிற்கு வரும் நிதிப் பகிர்வு வெகுவாக குறைந்திருக்கிறது. கல்வி நிதி மறுக்கப்படுகிறது. தொகுதி மறுவரையில் தமிழ்நாட்டுக்கான மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை குறையப் போவதாக கூறப்படுகிறது. வக்ப் வாரியத்தின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து துன்புறுத்தப்படுகிறார்கள். மும்மொழிக் கொள்கையை திணிக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படுவது தாமதப்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டிற்குத் தேவையான பேரிடர் நிவாரண நிதி வழங்கப்படவில்லை. கீழடி ஆய்வை காக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தப் பிரச்சினைகளுக்காக சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் ஏதாவது குரல் கொடுத்தாரா என்றால் நிச்சயம் இல்லை. மாறாக, ஆளும் பாஜக நிலைப்பாட்டை ஆதரித்துப் பேசியவர். இப்படிப்பட்டவருக்கு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிப்பது தமிழ்நாட்டு மக்களுக்கு எதிரான செயல்.

ஆளுநர் பதவி என்பது அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு பதவி. பொதுவாக ஆளுநராக பொறுப்பேற்றுக் கொண்டு விட்டால் அரசியல் பேசுவதைத் தவிர்ப்பார்கள். ஆனால் இதற்கு முற்றிலும் முரணானவர் சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள். ஆளுநர் பொறுப்பு ஏற்றுக் கொண்ட திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அரசியல் பேசுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார். பாஜக சித்தாந்தத்திற்கு ஆதரவாகப் பேசியவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன். இந்தியக் குடியரசு துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுபவர்தான் நாடாளுமன்ற மாநிலங்களவைத் தலைவர் பதவியையும் வகிப்பார் என்ற நிலையில், சித்தாந்த ரீதியாக செயல்படும் சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் நடுநிலையாக செயல்படுவார் என்று நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது. நடுநிலையை கடைபிடிக்காத ஒருவரை இந்தியக் குடியரசு துணைத் தலைவராக தேர்ந்தெடுப்பது ஜனநாயகத்திற்கு எதிரான செயல்.

2024 ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணி சார்பில் 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திமுகவிற்கு நூறு விழுக்காடு வெற்றி கிடைத்தது. பாஜகவிற்கு எதிராக தமிழ்நாட்டு மக்கள் ஓரணியில் நின்று திமுக கூட்டணிக்கு வாக்களித்துள்ளனர். இந்த நிலையில் பாஜக சித்தாந்தத்தை பேசும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிப்பது என்பது தமிழ்நாட்டு மக்களுக்கு எதிரான செயல்.

புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தமிழர் என்ற சொல்லுக்கு மிக அழகான விளக்கம் அளித்துள்ளார்.

**எங்கு பிறப்பினும் தமிழர் தமிழரே;**
**இங்கு பிறப்பினும் அன்னியர் அன்னியரே.**

**சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் இங்கு பிறந்தாலும் அவர் அன்னியரே தவிர நம்மவர் அல்ல.**

**அவர் பிறப்பால் தமிழராக இருக்கலாம். ஆனால் உணர்வால் நிச்சயமாக இல்லை.**

# புதுக்கோட்டையில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - கே.கே.செல்லப்பாண்டியன் நல உதவிகள் வழங்கினர்!

புதுக்கோட்டை, ஆக.23–

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், மேலூர் சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாமில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் (21.08.2025) அன்று பொதுமக்களிடம் விண்ணப்பங்களைப் பெற்றுகொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:–

முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில், முதலமைச்சர் அவர்கள் 15.07.2025 அன்று சிதம்பரத்தில், தமிழ்நாட்டிலுள்ள கடைக்கோடி மக்கள், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/ திட்டங்களை, அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும், “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்கள்.

“உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழான, முகாம்களில் நகர்ப்புறப் பகுதிகளில் 13 அரசுத் துறைகளின் 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 அரசுத் துறைகளின் 46 சேவைகளும் வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்களின் மீது, உடனடியாகத் தீர்வு கிடைக்கக்கூடிய இனங்களில் உடனடியாகத் தீர்வு காணப்படும். பிற இனங்களில் அதிகபட்சமாக 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும். அதன்படி, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், மேலூர் சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாமில் கலந்து கொண்டு, மக்களிடம் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டு, விவரங்கள் கேட்டறிந்தார்.

அதனடிப்படையில் இம்முகாமானது, புதுக்கோட்டை மாவட்டத்தில், மாநகராட்சி பகுதியில் 29 முகாம்களும், அறந்தாங்கி நகராட்சி பகுதியில் 10 முகாம்களும், பொன்னமராவதி, கறம்பக்குடி, ஆலங்குடி, கீரனூர், கீரமங்கலம், இலுப்பூர், அன்னவாசல் மற்றும் அரிமளம் ஆகிய 8 பேரூராட்சி பகுதிகளில் தலா இரண்டு வீதம் 16 முகாம்களும், ஊராட்சி பகுதிகளில் 151 முகாம்களும், பெரிய நகரங்களில் 7 முகாம்களும் ஆக மொத்தம் 213 முகாம்கள் 15.07.2025 முதல் 21.10.2025 வரை நடத்தப்பட உள்ளன.

எனவே, தமிழக அரசின் மூலம் பொதுமக்களின் நலனிற்காக செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்தி, தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

பின்னர் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கே.வி.கோட்டை ஊராட்சி, அரசடிப்பட்டி நால் ரோடு, ஆர்.எஸ். திருமண மண்டபத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாமில், கலந்து கொண்டு பொதுமக்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை , உதவி ஆணையர் (கலால்) திருமால், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சா.மோகனசுந்தரம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர்பாஷா, வட்டாட்சியர்கள் சோனை கருப்பையா (குளத்தூர்), பி.வில்லியம் மோசஸ் (ஆலங்குடி), அன்னவாசல் வட்டார வளர்ச்சி அலுவலர் வேலு, திருவரங்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முத்துராமன், செந்தில்குமார், கீரை. தமிழ்ராஜா, பூங்குடி சிவா, டி.தங்கமணி, உஷா செல்வம், ஆர்.வி.செல்வம், கே.வி.சுப்பையா, கை.பழனிச்சாமி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.